Pamphlet

# ரமழானில் பாவம் புரிந்தவரின் கப்ருடைய பயங்கர நிலை

(Ramadan Me Gunnah karnay Walay ki Qabr ka Bhiyanak Manzar)

(Tamil)



اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَ الصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ؕ

# ரமழானில் பாவம் புரிந்தவரின் கப்ருடைய பயங்கர நிலை

ஷெய்கெ தரீகத், அமீரே அஹ்லுஸ் சுன்னத், தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத் அல்லாமா மௌலானா அபூ Bபிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரZஸவி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள் வழங்கியது:

❀❀❀❀❀

ஒரு முறை ஹழ்ரத் ஸய்யிதுனா அலி كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்கள் கப்ருகளை ஸியாரத் செய்வதற்காக கூஃபா நகரின் கப்ரிஸ்தான் சென்றபோது, அங்கே புதிதாக இருந்த ஒரு கப்ரின் மீது பார்வை பட்டது. அவர்களுக்கு كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அந்த கப்ரின் நிலைமையை அறிந்துக்கொள்ள விருப்பம் ஏற்பட்டதும், அல்லாஹுதஆலாவின் சன்னிதானத்தில், “யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! இந்த மய்யித்தின் நிலைமையை எனக்கு வெளிப்படுத்துவாயாக” என பிரார்த்தித்தார்கள், அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் சன்னிதானத்தில் தாங்களின் வேண்டுகோள் உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கும் அந்த மய்யித்துக்கும் இடையே இருந்த அனைத்து திரைகளும் நீக்கப்பட்டது. இப்போது அந்த கப்ரின் பயங்கரமான காட்சி அவர்களுக்கு முன்னால் இருந்தது. அவர்கள் பார்க்கிறார்கள், அதிலுள்ள மய்யித்தை நெருப்பு சூழ்ந்துக்கொண்டுள்ளது. மேலும் அழுதழுது அவர்களிடம் كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم முறையிடலானான்:

"يَا عَلِيُّ! اَنَا غَرِيْقٌ فِى النَّارِ وَحَرِيْقٌ فِى النَّارِ"

அதாவது: **அலியே!** நான் நெருப்பில் மூழ்கியுள்ளேன், நெருப்பில் எரிந்துக்கொண்டிருக்கிறேன்.

கப்ரின் பயங்கர நிலை மற்றும் மய்யத்தின் துயரம் மிகுந்த சப்தத்தைக் கேட்ட ஹழ்ரத் ஸய்யிதுனா அலி كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்கள் பொருக்க முடியாமல், தனது கிருபையாளனான இறைவனின் சன்னிதானத்தில் கரங்களை உயர்த்தி பணிவுடன் அந்த மய்யித்தின் பிழைபொறுப்பிற்காக துஆ இறைஞ்சினார்கள். ஓர் அசரீரு கேட்டது. “அலியே! நீங்கள் இவருக்கு சிபாரிசு செய்யாதீர்கள், ஏனெனில் நோன்பு நோற்றுக்கொண்டு இந்த மனிதன் ரமழான் மாதத்தை கண்ணியப்படுத்தவில்லை, சங்கையான ரமழானிலும் பாவங்களிலிருந்து மீளவில்லை. பகலிலே நோன்பு நோற்றுக்கொள்வான், ஆனால் இரவிலே பாவங்களில் மூழ்கி விடுவான்.” அதைக்கேட்ட அலிய்யுல் முர்தழா كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்கள் மேலும் அதிக துயரத்திற்கு ஆளானார்கள். பின்பு ஸஜ்தாவில் விழுந்து, அழுதழுது கூறினார்கள்: யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! என் மரியாதை உன் கரங்களில் உள்ளது. இந்த அடியான் மிகவும் நம்பிக்கையுடன் என்னை அழைத்துள்ளான். எனது எஜமானே عَزَّوَجَلَّ! இவனது எதிரில் நீ என்னை இழிவாக்கி விடாதே, இவனது கதியற்ற நிலைமை மீது சற்று கருணை செய்து, இவனை மன்னித்து விடுவாயாக! ஹழ்ரத் அலி كَرَّمَ اللّٰهُ تَعَالٰى وَجْهَهُ الْكَرِيْم அவர்கள் அழுதழுது முனாஜாத் செய்துக் கொண்டிருக்கும்போது, அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய கருணைக்கடல் பொங்கி எழுந்தது. மேலும் அசரீரு கேட்டது: “அலியே! நாம் இவனை உங்களின் துயருற்ற மனதின் காரணத்தினால் மன்னித்து விட்டோம். பின்பு அந்த மய்யத்தின் மீதிலிருந்து தண்டனை அகற்றப்பட்டு விட்டது. (அனீஸுல் வாஇளீன், பக்கம் 25)

எந்த மனிதர்கள் நோன்பு வைத்துக்கொண்டு பாவங்களை ஏற்படுத்தும் காரியங்களில் ஈடுபடுகின்றார்களோ, உதாரணமாக: சீட்டாட்டம் (card games), சதுரங்கம் (chess), லூடோ, தொலைபேசி, ipad போன்றவற்றில்

வீடியோ Gகேம்ஸ், படம், நாடகம், பாட்டுக்கூத்து, தாடி வழிப்பது அல்லது ஒரு பிடியை விட குறைப்பது, எக்காரணமுமின்றி ஜமாஅத்தை விடுவது, மாறாக معاذ الله عزوجل தொழுகையை கழா செய்வது, பொய், புறம், கோள், கெட்டெண்ணம், வாக்கு மீறுதல், தூசனம் பேசுதல், மார்க்க அனுமதியின்றி முஸ்லிம்களுக்கு தொந்தரவு கொடுப்பது, மார்க்க முறைப்படி தகுதி இல்லாதிருக்கும் பட்சத்திலும் கேட்பது (பிச்சை கேட்பது), பெற்றோர்களின் பேச்சைக்கேட்காமல் இருப்பது, வட்டி மற்றும் இலஞ்சத்தின் கொடுக்கல் வாங்கல், வியாபாரத்தில் ஏமாற்றுவது இதுபோன்ற கெடுதியில் இருந்து சங்கையான ரமழானிலும் வெளிவராமல் இருப்பவர்களுக்காக, மேற்கூறப்பட்ட சம்பவத்தில் படிப்பினையே அடங்கியுள்ளது.

முபாரக்கான ரமழானில் பாவங்களை விட்டும் மீளாதவர்கள் மேலும் இரண்டு ஹதீஸ்களை கேட்டு தன்னைத்தானே அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் கோபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

(1) எவரொருவர் முபாரக்கான ரமழானில் பாவம் செய்கிறாரோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அவனின் ஒரு வருட அமல்களை அழித்து விடுகிறான். (அல்முஃஜமுல் அவ்ஸத், பாகம் 2, பக்கம் 414, ஹதீஸ் 3688)

(2) எதுவரை ரமழான் மாதத்தின் ஹக்கை நிறைவேற்றுகிறார்களோ, அதுவரை எனது உம்மத்தினர்கள் கேவலப்படமாட்டார்கள், அப்போது யாரஸூலல்லாஹ் صَلَّى اللهُ تَعَالٰى عَلَيْهِ وَاٰلِهٖ وَسَلَّم! ரமழானின் ஹக்கை வீணாக்குவதில், அவர்கள் கேவலப்படுவார்கள் என்பது என்ன? என்று கேட்கப்பட்டது: கூறினார்கள், “இந்த மாதத்தில் அவர்கள் ஹராமான வேலைகளை செய்வது,” பின்பு கூறினார்கள். “எவர் இந்த மாதத்தில் விபச்சாரம் செய்கிறாரோ அல்லது மதுபானம் அருந்துகிறாரோ, அவருக்கு அல்லாஹ்வும், வானத்தில் இருக்கக்கூடிய அனைத்து மலக்குமார்களும் அடுத்த ரமழான் வரை சாபமிடுகிறார்கள். மேலும் அவன் அடுத்த ரமழானை அடைவதற்கு முன் மரணித்து விட்டால், நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கக்கூடிய எந்தவொரு நல்அமலும் அவனிடம் இருக்காது. எனவே நீங்கள் ரமழானின் விடயத்தில் பயப்படுங்கள். ஏனென்றால் இந்த மாதத்தில் எப்படி ஏனைய மாதங்களை விட நல்அமல்களுக்கு நன்மை அதிகரிக்கப்படுகிறதோ அதேபோல் பாவமும் அப்படித்தான்.” (அல்முஃஜமுஸ் ஸஙீர், பாகம் 1, பக்கம் 248)

**இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே!** அஞ்சிக்கொள்ளுங்கள்! **ரமழான் மாதத்தின்** மகத்துவத்தை அறிந்துக்கொள்ள முக்கிய கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் ரஹ்மத்தை விட்டும் நம்பிக்கை இழந்து விடாதீர்கள், ரஹ்மத்தின் வாயில் திறந்தே உள்ளது. அழுது, மன்றாடி தௌபா செய்து பாவத்திலிருந்து மீண்டு விடுங்கள். நல்லவராகவும், சுன்னத்துக்களைப்பேணி நடப்பவராகவும் ஆகுவதற்காக **தஃவதே இஸ்லாமியின்** சுன்னத்துக்கள் நிறைந்த வாராந்த இஜ்திமாவில் கலந்துக்கொள்வதோடு, சுன்னத்துக்களின் பயிற்சியளிக்கும் **மதனி காஃபிலாக்களில்** நாயகத்தின் ஆஷிகீன்களுடன் பயணிப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

முஹம்மத் இல்யாஸ் அத்தாரி காதிரி

20 ஷஃபானுல் முஅள்ளம், 1436 (08-June-2015)

❀❀❀❀❀

**குறிப்பு:** ஷெய்கெ தரீகத், அமீரே அஹ்லுஸ் சுன்னத், தஃவதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத் அல்லாமா மௌலானா அபூ Bபிலால் முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரZஸவி دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்கள் எழுதிய நூலாகிய ஃபைZஸானே ரமழானை (Blessings of Ramazan) வாசியுங்கள். அதில் மிகவும் இலேசான முறையில் சிறப்புக்களையும், நோன்பின் சட்டங்களையும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த துண்டுப்பிரசுரம், ஃபைZஸானே ரமழான், மேலும் அமீரே அஹ்லுஸ் சுன்னத்தின் சுன்னத்துக்கள் நிறைந்த பயான்களின் V.C.D s போன்றவற்றை மக்தBபதுல் மதீனாவின் கிளையிலிருந்து வாங்கிக்கொள்ளுங்கள்.